அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 06/2015

எனது இல : EST-1/MISCL/06/0032
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07.

2015.11.24

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க அலுவலர்களின் முறையீடுகளை மேலதிகாரிகளுக்கு சமர்ப்பிப்பது தொடர்பாக**

தாபன விதிக்கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகள் தொடர்பாக தங்களது அவதானம் கோரப்படுகின்றது.

02. தமது திணைக்களத் தலைவரின் அல்லது ஏனைய உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தாது அரசாங்க அலுவலர்களினால் தமது மேன்முறையீடுகளை தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குப் புறம்பாக நேரடியாக மேலதிகாரிகளிடம் முன்னளிக்கின்ற நிலை அதிகரித்துக் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அது மிகவும் அதிருப்திகரமான ஒரு நிலைப்பாடாகும்.

உதாரணமாக:- உதவிப் பிரதேச செயலாளர் ஒருவர், பிரதேச செயலாளருக்கோ, மாவட்டச் செயலாளருக்கோ, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கோ தெரியப்படுத்தாது நேரடியாக எனக்கு மேன்முறையீடுகளை சமர்ப்பித்தல்.

03. எந்தவொரு அலுவலரும் தாபன விதிக்கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளைக் கடைப்பிடிக்காது, தமது முறையீடுகளை அதிகாரிகளிடம் சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில், அதற்கு ஏதுவான காரணங்களை ஆராய்ந்து, விசேடமான காரணம் ஏதுமில்லை என தெரியவரும் பட்சத்தில் அவ் அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

04. அவ்வாறே, அனைத்து மட்டங்களிலும் உள்ள மேற்பார்வை அலுவலர்கள் தாபன விதிக்கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு தொடர்பாக அவதானஞ் செலுத்த வேண்டியுள்ளதுடன், அதன் ஏனைய பிரிவுகளின் கீழ் 5:1 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும். எந்தவொரு அலுவலரினாலும் உரியவாறு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை அல்லது மேன்முறையீட்டினை உரிய வகையில் அதிகாரியிடம் சமர்ப்பிக்கத் தவறும் மேற்பார்வை அலுவருக்கு எதிராக மேற்படி 03 பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

ஒப்பம்/ ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு